1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தம் விடப்பட்டு இப்பொழுது அந்த ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அந்த ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே தருகின்ற ஆட்சியைப் பெற்றிருக்கின்ற நாம் ஒவ்வொரு தொகுதிக்கும் நம்முடைய இதய தெய்வம் அவர்கள் கேட்காமலே திட்டத்தை அறிவிக்கிறார்கள். அந்த வகையில் அன்னை சந்தியா கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 3,4 ஆண்டுகளாக அந்தக் கரும்பைப் பிழிகின்ற நிலைமை ஏற்படாமல் இருந்தாலும் ஆண்டாண்டு தோறும் 15,20,25 இலட்சங்களை இலாபமாகப் பெற்றிருக்கிறது. ஆகவே, வருகின்ற அறவைப் பருவத்திற்கு அந்த ஆலையைத் தயார் செய்து தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலைக்கு கள்ளக்குறிச்சி வட்டத்தில் 5 பிர்க்காக்களே விளையும் சுமார் 4 இலட்சம் டன் கரும்பு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கரும்பெல்லாம் பக்கத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இப்பொழுது அறவை செய்யப்பட்டு வருகிறது. அடுத்த 95-96 ஆம் ஆண்டு கரும்பு அறவைப் பருவத்தின் முடிவில் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 433, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

433—

போளூர் ஒன்றியத்தில் சத்துணவு மையம் அமைத்தல்

** 36601* திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியத்தில் புதியதாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், கணேசபுரம், சோழங்குப்பம், முனியன்குடிசை, செட்டியபுரம் போன்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தவொரு குழந்தையும் பசி என்று இருக்கக்கூடாது என்று கருதி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தச் சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையிலே இன்றைய நிலையில் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த 4 கிராமங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு மீண்டும் ஆய்வு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஜனத்தொகை இருந்தால் அந்த இடத்திலே சத்துணவு மையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள், கணேசபுரம் அருகில் அத்திமுல் என்ற இடத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் 2 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. முனியன்குடிசை அருகில் சேதாரம்பட்டு என்ற இடத்தில் ஒரு குழந்தைகள் சத்துணவு மையம் இருக்கிறது, அது ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. செட்டியந்தல் அருகில் சேதாரம்பட்டு குழந்தைகள் சத்துணவு மையம் இருக்கிறது. அது 3 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. நீங்கள் கேட்டிருக்கிற சோழங்குப்பம் அருகில் காங்கேயனூர் குழந்தைகள் சத்துணவு மையம் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால் கணேசபுரம், முனியன்குடிசை, சோழங்குப்பம் ஆகிய 3 கிராமங்களுக்கும் கிராம உதவியாளர்கள் மூலம் உணவு எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 120 ரூபாய் செலவாகிறது. இருந்தாலும் அந்தச் செலவை ஏற்று இந்தக் குழந்தைகளுக்கு அங்கே கொண்டுபோய் உணவு கொடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும். செட்டியந்தலுக்கு உணவு எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே அதைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள இயலாது.

திரு.தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாப்பாட்டை எடுத்துக்கொண்டு சென்று போடுவதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே ஆயிரம் பேர் எல்லாக் கிராமங்களிலும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 2 கிலோமீட்டர், 3 கிலோ மீட்டர் சென்று

சாப்பாடு போடுவதில் பல பிரச்சினைகள் வருகின்றன. நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் புரட்சித் தலைவரின் பெருமையை உணர்ந்துதான் புரட்சித்தலைவி அவர்கள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். புரட்சித் தலைவருடைய புகழைப் பரப்பும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மேலும் விரிவுபடுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கையின்படி ஆயிரம் ஜனத்தொகை இல்லை என்று கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை மாற்றப்பட்டு ஆயிரம் ஜனத்தொகை இருப்பது நிரூபிக்கப்பட்டால் நிச்சயமாக அந்த இடத்தில் சத்துணவுக் கூடம் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 434, திரு.க. பழனிசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

434—

எடப்பாடி தொகுதியில் நூற்பாலை அமைத்தல்

***38499—திரு. க. பழனிசாமி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு.க. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எடப்பாடி தொகுதியில், திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கம் கொங்கணாபுரத்தில் இருக்கிறது. இதில் சுமார் ஆண்டு ஒன்றுக்கு 80 கோடி ரூபாய்க்கு மேல் பருத்தி விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?